# முக்கிய உண்மைகள் ஆவணம் கடன் அட்டை மற்றும் பற்று அட்டைகள் – பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் மேலதிக தகவல்கள்

## முக்கிய உண்மைகள் ஆவணம் – கடன் அட்டை

| நெறிமுறை | விபரம் |
|---|---|
| **தயாரிப்பின் முக்கிய அம்சங்கள் மற்றும் தன்மை** | • MasterCard **யின்** Standard, Gold, Titanium, Platinum **மற்றும்** World **அட்டை வகைகளில் கிடைக்கப்பெறும்**.<br>• இரட்டை இடைமுக அட்டைகள் ( பாதுகாப்பான உட்பொதிக்கப்பட்ட சிப் வழியாக தொடுபுல மற்றும் தொடர்பற்ற பரிவர்த்தனைகள்)<br>• **CDB Self App** மூலம் உங்கள் கிரெடிட் கார்டின் -தற்போதைய கணக்கு நிலுவை(Available Balance) நேரடியாக (Real-Time) பார்க்கலாம். மேலும், கிரெடிட் கார்டு PIN எண்ணை பாதுகாப்பாக உருவாக்கி நிர்வகிக்கவும் முடியும்.<br>• **பில் கொடுப்பனவு திகதிகள்** – ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதி மற்றும் கடைசி நாளில் செலுத்தலாம்.<br>• **கட்டண கொடுப்பனவு விருப்பங்கள் – CDB** கிளைகள், ஊனுட சுய செயலிஇ காசோலைகள் மற்றும் Cargills விற்பனை நிலையங்கள்<br>• **துணை அட்டைகள்** - எந்தவொரு உடனடி குடும்ப உறுப்பினரும் ஒரு அட்டையைப் பெற்று உங்கள் **எல்லையை** பயன்படுத்தலாம், **அவர்கள்** மேற்கொள்ளும் பாவனை உங்கள் அட்டை கணக்கிற்கு பில் செய்யப்படும். அட்டைதாரரின் வயது 18இற்கு அதிகமாக இருக்க வேண்டும்.<br>• கடன் அட்டையின் செல்லுபடியாகும் காலம் 04 வருடங்களாகும். |

| | |
|---|---|
| **நன்மைகள் மற்றும் பெறுமதி சேர் சேவைகள்** | • வாழ்நாள் முழுவதும் வருடாந்த கட்டண தள்ளுபடி<br>• **CDB Self App** – Green PIN எண்ணை உருவாக்குதல் மற்றும் -தற்போதைய கணக்கு நிலுவைAvailable Balance) நேரடியாக (Real-Time) பார்வையிடுதல்.<br>• World அட்டை வைத்திருப்பவர்களுக்கு பயணக் காப்புறுதி.<br>• World அட்டை வைத்திருப்பவர்களுக்கு ஒவ்வொரு பஞ்சாங்க வருடத்திற்கும் இரண்டு முறை இலவச Lounge Key அணுகல்.<br>• **சம மாதத் தவணைத் திட்டம் (EMI Plan) - ரூபாய் 10,000/-** இற்கு மேற்பட்ட எந்தவொரு கொள்வனவையும் குறைந்த வட்டி விகிதத்தில் தவணைத் திட்டமாக மாற்றும் வசதி.<br>• கடன் அட்டைகள் மூலம் பண முன்பணங்கள் (ATM கள் மூலம் உடனடிப் பணம் எடுத்தல்).<br>• எல்லை அதிகரிப்புகள் மற்றும் கடன் அட்டை மேம்படுத்தல்கள்.<br>• ஓய்வு, உணவு, வாழ்க்கை முறை பொருட்கள் போன்றவற்றுக்கான சிறப்புத் தள்ளுபடி சலுகைகள். மேலதிக தகவல்களுக்கு https://www.cdb.lk/cdb-offers ஐ பார்க்கவும்.<br>• இலவச இ-ஸ்டேட்மெண்ட் மற்றும் SMS எச்சரிக்கை வசதிகள் மூலம் ஒவ்வொரு அட்டை பரிவர்த்தனையையும் கண்காணிக்கலாம். |

| | |
|---|---|
| **வட்டி வீதம் மற்றும் அபராதம், அறவீடுகள், கட்டணங்கள் மற்றும் தரகு** | • சந்தை வீதங்களுக்கு ஏற்ப வட்டி வீதம் அமுல்படுத்தப்படும்<br>• அட்டை வகைகளுக்கு ஏற்ப இணைந்துக் கொள்ளும் கட்டணம் (Joining fees) அறவிடப்படும். (Standard, Gold, Titanium, Platinum மற்றும் World)<br>• தாமதக் கட்டணம், வரம்புக்கு மேலான கட்டணம் மற்றும் கடன் அட்டைக்கு பொருந்தும் பிற அனைத்துக் கட்டணங்களும் CDB நிறுவனத்தின் இணையத்தளமான https://www.cdb.lk/products/cards/credit-cards இல் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. |
| **விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | கடன் அட்டை செயற்பாடுகளுக்கான பொது விதிமுறைகள்', கொடுப்பனவுகள் தொடர்பான சர்ச்சைகள், கடன் அட்டைக்கான கட்டணங்கள் மற்றும் நிலுவையில் உள்ள கடன் அட்டை தொகைகளுக்கான வட்டி மற்றும் தாமதக் கட்டணங்கள் கணக்கிடப்படும் முறை ஆகியவை தொடர்பான பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் நிறுவனத்தின் இணையத்தளத்தில் கிடைக்கப்பெறுகின்றன.<br><br>https://www.cdb.lk/products/cards/credit-cards |

| | |
|---|---|
| **உற்பத்தி / சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறை** | • இலங்கையில் வதியும் 18 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு தனிநபர் ∴ தொழில்நெறிஞர்.<br>• வாடிக்கையாளரின் சுயவிவரத்தின் அடிப்படையில் பெறப்பட வேண்டிய ஆவணங்கள் பின்வருமாறு.<br><br>**<u>சம்பளம் பெறும் வாடிக்கையாளர்கள்</u>**<br>• முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கடன் அட்டை விண்ணப்பப் படிவம்.<br>• தேசிய அடையாள அட்டை (NIC), செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி.<br>• வேலை வழங்குநரால் சான்றளிக்கப்பட்ட கடந்த 3 மாத சம்பளப் பட்டியல்கள்.<br>• நிரந்தர முகவரிக்கான சான்றாக ஒரு அண்மைய பயன்பாட்டு பில்லின் பிரதி.<br>• கடந்த 3 மாத வங்கி அறிக்கைகள்.<br>• உத்தரவாதம் அளிப்பவரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி<br><br>**<u>சுயதொழில் செய்பவர்கள் / வணிகம்</u>**<br>• முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கடன் அட்டை விண்ணப்பப் படிவம்.<br>• தேசிய அடையாள அட்டை (NIC), செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி.<br>• வியாபார பதிவுச் சான்றிதழ்<br>• வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனத்திற்கான படிவம் 18 மற்றும் 20<br>• கடந்த நான்கு மாதங்களுக்கான வங்கி அறிக்கைகள் (நிறுவனம் மற்றும் தனிப்பட்ட)<br>• நிரந்தர முகவரிக்கான சான்றாக ஒரு அண்மைய பயன்பாட்டு பில்லின் பிரதி.<br>• உத்தரவாதம் அளிப்பவரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி. |

| | |
|---|---|
| | **தற்போதுள்ள வாடிக்கையாளர்கள்**<br>• முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கடன் அட்டை விண்ணப்பப் படிவம்<br>• தற்போதுள்ள வசதியினை பிணையாக (security) அடமானம் வைக்கப்பட வேண்டும்<br><br>**OBC - பிற வங்கி அட்டைகளை வைத்துள்ள வாடிக்கையாளர்கள்**<br>• முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கடன் அட்டை விண்ணப்பப் படிவம்.<br>• தேசிய அடையாள அட்டை (NIC), செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி.<br>• கடந்த மாத OBC இன் அறிக்கை.<br>• செல்லுபடியாகும் வருமானச் சான்று.<br>• நிரந்தர முகவரிக்கான சான்றாக ஒரு அண்மைய பயன்பாட்டு பில்லின் பிரதி.<br>• உத்தரவாதம் அளிப்பவரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி<br><br>**சம மாதாத் தவணைத் திட்டம் (EMI திட்டம்)**<br>அட்டைதாரர் இந்த வசதிக்கான கோரிக்கையை 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.<br><br>**பண முன்பணங்கள்**<br>அட்டைதாரர்கள் எந்தவொரு வங்கியின் ATM இயந்திரங்களிலிருந்தும் கடன் அட்டை மூலம் 'பண முன்பணங்களை' பெற்றுக்கொள்ளலாம்.<br>பண முன்பணங்களுக்கான உச்ச வரம்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:<br>• World அட்டை - கடன் எல்லையின் 10%<br>• Standard/Gold/Titanium/Platinum - கடன் எல்லையின் 20% |

| | |
|---|---|
| | **எல்லை அதிகரிப்பு மற்றும் கடன் அட்டை மேம்படுத்தல்**<br><br>அட்டைதாரர்கள் கடன் அட்டை எல்லையை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கலாம்.<br><br>CDB வங்கியானது அதன் சுயாதீன மதிப்பீட்டு அளவுகோல்களின்படி கடன் எல்லையை அதிகரித்து, அதற்கேற்ப அட்டையின் வகையை மேம்படுத்தும். |

| | |
|---|---|
| **கணக்கு கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தெளிவுபடுத்தல்களும் விசாரணைகளும்** | தயவு செய்து எமது 24/7 நேரமும் இயங்கும் CDB கடன் அட்டை அவசர அழைப்பு இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.<br><br>**வர்ல்ட்/பிளாட்டினம்** - 011 7 121 121<br><br>**ஸ்டாண்டர்ட் /கோல்ட் / டைட்டானியம்** - 011 7 121 122<br><br>cards.customercare@cdb.lk என்ற முகவரியூடாக எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும்<br><br>தயவு செய்து அருகிலுள்ள CDB கிளைக்கு வருகை தரவும். |
| **பொருந்தக்கூடிய சட்ட ஏற்பாடுகள்** | 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் ஒழுங்குவிதிகள்<br><br>2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் கையடக்க கொடுப்பனவுத் முறைமை ஒழுங்குவிதிகள் |

## முக்கிய உண்மைகள் ஆவணம் – பற்று அட்டை

| நெறிமுறை | அங்க அடையாளங்கள் |
|---|---|
| **தயாரிப்பின் முக்கிய அம்சங்கள் மற்றும் தன்மை** | • VISA மூலம் வழங்கப்படும்.<br>• CDB பற்று அட்டைகள், சிறார்களின் சேமிப்புக் கணக்குகள் தவிர்ந்த அனைத்து CDB சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கும் வழங்கப்படும்.<br>• தனிப்பயனாக்கப்படாத உடனடி அட்டைகள் பெற்றுக்கொள்ள முடியும்.<br>• இரட்டை இடைமுக அட்டைகள் (பாதுகாப்பான உட்பொதிக்கப்பட்ட சிப் வழியாக தொடர்பு மற்றும் தொடுதலற்ற பரிவர்த்தனைகள்)<br>• கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய இலவச மற்றும் உடனடி குறுஞ்செய்தி விழிப்பூட்டல்கள் (உள்நாட்டு மற்றும் சர்வதேச கொடுக்கல் வாங்கல்கள்)<br>• தொடுதலற்ற கொடுப்பனவுகளுக்காக PayWave தொழில்நுட்பத்துடன் இயலுமைப்படுத்தப்பட்டுள்ளது<br>• பற்று அட்டையின் செல்லுபடியாகும் காலம் 05 வருடங்கள் ஆகும். |

| | |
|---|---|
| **நன்மைகள் மற்றும் பெறுமதி சேர் சேவைகள்** | • CDB ஆல் குறித்துரைக்கப்பட்ட தினசரி மீளப்பெறல் / கொள்வனவு வரம்புகளுக்கு உட்பட்டு சேமிப்புக் கணக்கில் கிடைக்கும் தொகையை மீளப்பெறுவதற்கு / கொள்வனவு செய்வதற்கு அட்டைதாரருக்கு உதவுதல்.<br>• CDB, வணிக அல்லது ஏனைய வங்கி ATM ஊடாக 24 மணி நேரமும் பணத்தை மீளப்பெற்றுக்கொள்ள முடியும்.<br>• உள்ளூர் மற்றும் சர்வதேச கொடுப்பனவுகளுக்கான இணையவழியூடான கொடுப்பனவு வசதி.<br>• இந்த அட்டை உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. |
| **பற்று அட்டை கட்டணம்** | பற்று அட்டை வழங்கல் கட்டணம்இ வருடாந்த கட்டணம் மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டணங்கள் பற்று அட்டை ஏற்புடைய ஏனைய அனைத்து கட்டணங்களும் CDB நிறுவனத்தின் இணையத்தளத்தில் இற்றைப்படுத்தப்படும் https://www.cdb.lk/products/cards/debit-card |
| **விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பற்று அட்டை கட்டணம் ஆகியவை நிறுவன இணையதளத்தில் பெற்றுகொள்ள முடியும்.<br><br>https://www.cdb.lk/products/cards/debit-card |
| **உற்பத்தி / சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறை** | CDB சேமிப்புக் கணக்கினைக் பேணும் 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கையில் வதிவாளர்கள். |
| **கணக்கு கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தெளிவுபடுத்தல்களும் விசாரணைகளும்** | தயவு செய்து எமது 24/7 நேரமும் இயங்கும் CDB<br><br>கடன் அட்டை துரித அழைப்பு இலக்கம் 0117 388 399<br><br>ஐ தொடர்பு கொள்ளவும் cards.customercare@cdb.lk<br><br>அருகிலுள்ள CDB கிளைக்கு செல்லவும். |